Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 98 / 2023

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.2**

| | | | |
|---|---|---|---|
| Name: | சரவணன் | Calling: | மெடிக்கல் ஷாப் |
| Father's Name: | துரை | Religion: | இந்து |
| Village: | பெரியார் நகர் | Age: | 37 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 05.03.2024

| |
|---|
| SIGN : |

(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 2 முதன்மை விசாரணை

எதிரியை தெரியும். அசா1 எனது தாயார். 09.03.2014 ம் தேதி எனது அம்மா அசா1 பிச்சாண்டியிடம் சீட்டு கட்டிக்கொண்டிருந்தார். அது முடிவடைந்து ரூ. 1,50,000 பிச்சாண்டி தர வேண்டியிருந்தது. அதை தராமல் காலம் தாழ்த்தி வந்தார். இதை குறித்து எனது அம்மா 14.11.2016 ம் தேதி மாலை நேரத்தில் பிச்சாண்டியின் வீட்டிடம் சென்று பணத்தை கேட்டார். அதற்கு பிச்சாண்டி எனது தாயாரை தேவிடியா என்று அசிங்கமாக ஆபாசமான வார்த்தைகளால் திட்டினார். அதற்காக எனது தாயார் காவல் நிலையத்தில் வந்து திருமதி. ஹேமலதா போலிசாரிடம் புகார் கொடுத்தார். பிச்சாண்டி அந்த விசாரணையின்போது காவல் நிலையத்தில் தேதி குறிப்பிட்டு அந்த தேதியில் தருவதாக கூறினார். அதன்பின்பும் பணத்தை தரவில்லை. 04.03.2017 ம் தேதி காலை 07.30 மணிக்கு பிச்சாண்டி வீட்டிடம் சென்று பணத்தை கேட்டபோது அசிங்கமான வார்த்தைகளால் பேசி திட்டியதால் எனது தாயார் பயந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது ஏரிக்கரையிடம்

வந்து பிச்சாண்டி எனது தாயாரின் தலையின் மீது கையால் அடித்தார். அதில் எனது தாயார் மயங்கி கீழே விழுந்து விட்டார். அதன் பின்பு பிச்சாண்டி எனது தாயாரை காலால் எட்டி உதைத்து விட்டு சென்று விட்டார் என்று சாலையில் சென்று கொண்டிருந்த நபர் ஒருவர் என்னிடம் கூறினார். நான் எனதுதாயாரை அழைத்துக்கொண்டு வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

(கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய வாய்தா கேட்டு அது இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.)

சாட்சி கையொப்பம்
(ஒம்.) சரவணன்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.
(Sd./–) R.S.Praganthaa,
Judicial Magistrate, Vaniyambadi.

Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 98 / 2023

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.3**

| | | | |
|---|---|---|---|
| Name: | யுவராஜ் | Calling: | மாணவர் |
| Father's Name: | துரை | Religion: | இந்து |
| Village: | பெரியார்நகர் | Age: | 33 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 05.03.2024

| SIGN : |
|---|

(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 3 முதன்மை விசாரணை

எதிரியை தெரியும், அசா1 எனது அம்மா, அசா2 எனது அண்ணா. 04.03.2017 ம் தேதி பிச்சாண்டியிடம் பணம் கேட்பதற்காக அவரது வீட்டிற்கு சென்றபோது மிரட்டும் தோரணையிலும், அடிக்க முற்பட்டதால் எனது தாயார் பயந்து கொண்டு வீட்டிற்கு வரும்போது ஏரிக்கரை பக்கமாக பிச்சாண்டி கையால் எனது தாயாரின் தலையின் மீது அடித்ததில் எனது தாயார் கீழே விழுந்து விட்டார், அப்போது எதிரி காலால் எட்டி உதைத்து விட்டு சென்று விட்டார். வழியில் வந்தவர்கள் சம்பவத்தை குறித்து சொன்னார்கள். முதலில் எனது அண்ணன் அசா2 சம்பவ இடம் சென்று எனது தாயாரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையெழுத்தை நான் 07.03.2017 ம் தேதி காலை 11.00 மணிக்கு ஏரிக்கரையிடம் போலிசார் வந்து மேப் வரைந்ததற்காக சாட்சி கையொப்பம் போட்டுக்கொடுத்தேன். என்னுடன்

பரந்தாமன் என்பவரும் இருந்தார். அவரும் கையொப்பம் போட்டுக்கொடுத்தார். **பார்வை மகசர் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தனர்.

(கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய வாய்தா கேட்டு அது இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.)

சாட்சி கையொப்பம்
(ஒம்.) யுவராஜ்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./–) R.S.Praganthaa,
Judicial Magistrate, Vaniyambadi.